**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 20.03.2025.**
**C.C. 356/2022**

**Accused absent, petition filed and allowed. Both side counsels present.**

அ.சா. 3 திரு. வெங்கடேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

வேலு நாயக்கர் ஓட்டலில் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. எனது தாய், தகப்பனார் சொல்லித்தான் எனக்கு தெரியும். நான் என் முதல் விசாரணையில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானவை என்றால் சரியல்ல. அசா. 2 என் தகப்பனார் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பால்பாண்டியை நான் அடித்ததாக என் மீது ஒரு வழக்கு இருக்கிறது என்றால் சரிதான், ஆனால் நான் அடிக்கவில்லை. நான் பால்பாண்டியை அடிக்கும் போது நானும், என் அப்பாவும் கீழே விழுந்ததால் எங்களுக்கு காயம் ஏற்பட்டதனாலும், ஏற்கனவே பால்பாண்டி எங்கள் மீது ஒரு வழக்கு கொடுத்து இருப்பதாலும், அதில் இருந்து தப்பிப்பதற்காக, எனக்கு ஏற்பட்ட காயங்களை பயன்படுத்தி அவர்கள் மீது இந்த வழக்கை உண்மைக்கு மாறாக கொடுத்து, அதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2025.03.20 17:21:53 +0530